විශ්‍රාම වැටුප් දෙපාර්තමේන්තුව

ஓய்வூதியத் திணைக்களம்
**DEPARTMENT OF PENSIONS**

ශ්‍රී ලංකා විශ්‍රාම
இலங்கை ஓய்வு
Sri Lanka Pensions

පරපුරක අභිමානය | தலைமுறையொன்றின் பெருமிதம் | **Pride of a Generation**

මගේ අංකය / எனது இல. / My No. } **ஓய்வூதிய அறிவுறுத்தல்க் கடித இல: 06 / 2023** ඔබේ අංකය / உமது இல. / Your No. } .......................... දිනය / திகதி / Date } 2023.05.17

அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்கள்,

மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள்,

திணைக்களத் தலைவர்கள்/முப்படைத் தலைவர்கள் / மாவட்ட செயலாளர்கள்,

பிரதேச செயலாளர்கள் மற்றும்,


உள்ளூர் அதிகார சபைகளின் தலைவர்கள்,

<u>புதிய ஓய்வூதியர்களுக்கான ஓய்வூதிய அடையாள அட்டைகளை வழங்குதல்</u>

மேற்படி விடயம் தொடர்பில் வெளியிடப்பட்ட 2015.12.29 ஆம் திகதிய 08/2015 ஆம் இலக்க ஓய்வூதியச் சுற்றறிக்கை இத்தால் இரத்துச் செய்யப்படுகிறது.

02. ஜூன் 2022 தொடக்கம் ஓய்வூதியர்களுக்கான ஓய்வூதிய அடையாள அட்டைகளை வழங்கும் செயல்முறை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டு, 2023.04.10 ஆம் திகதியிலிருந்து மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது.

03. PD 03 விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கப்பட்ட புகைப்படம் ஓய்வூதியரின் ஓய்வூதிய அடையாள அட்டைக்குப் பயன்படுத்தப்படுவதால், புகைப்படத்தின் ஏற்றுக்கொள்ளக்கூடிய நியமங்கள் மற்றும் தரத்தைப் பேணுவதற்காக 2023.06.01 ஆம் திகதி முதல் PD 03 விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் போது பின்வரும் வழிமுறைகளைப் பின்பற்றுமாறு அறிவிக்கப்படுகிறது.




கோவை பெயர்: NIC No.jpg
உ.ம்: 123456789V.jpg

මාලිගාවත්ත, කොළඹ 10. மாளிகாவத்தை கொழும்பு 10. Maligawatta, Colombo 10.
Hot line: 1970, Direct line: 2209800, Fax: 2342078, Email: info@pensions.gov.lk, Web: www.pensions.gov.lk

- **அளவு** - நீலப் பின்னணியில் பாஸ்போர்ட் அளவு, முன் நோக்கியவாறான வண்ண புகைப்படம்
- **கொள்திறன் (Capacity )** - முறைமையில் 01MB "JPEG" உடைய புகைப்படத்தைச் சேர்க்கவும்.
- **உடை-** சேலையில் பெண் அலுவலர்களும், மேற்சட்டை மற்றும் கழுத்துப்பட்டியுடன் ஆண் அலுவலர்களும்.

04. இதற்கமைய, பொலிஸ் உத்தியோகத்தர்களும், முப்படைகளின் அலுவலர்களும் ஏனைய அனைத்து அலுவலர்களும் PD 03 விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் போது மேலே தரப்பட்ட அறிவுறுத்தல்களை கடைபிடிக்குமாறு அன்புடன் அறியத்தருகின்றோம்.

**ஒப்பம்**
**ஏ.ஜகத் டீ.டயஸ்**
ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம்

**பிரதிகள்:**

1. செயலாளர், பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு – த.த.த